RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1991

OPEN ACCESS

# சித்தர் பாடல்களின் வழி சாதி மறுப்புச் சிந்தனைகள்

இரா. ராமலெட்சுமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620019, தமிழ்நாடு, இந்தியா

# Caste Rejection Thoughts in Siddhar Songs

R. Ramalakshmi [a, *]

[a] Department of Tamil, Urumu Dhanalakshmi College, Tiruchirapalli-620019, Tamil Nadu, India

* Corresponding Author: ramakshmi.tamil@gmail.com

Received: 12-09-2022
Revised: 23-10-2022
Accepted: 07-11-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Siddhar literature is still a unique literature in Tamil literature. The Siddhas have formulated their principles and doctrines in grammar. The word community means not only people living together but also living together based on an order in a society. The set of thoughts formed about what should and should not be done by a human being in a society is called morality or ethics. Based on this virtue, various virtues including the virtue of life have been said. Through the Vedas and the Puranas, the Vaidikas, the Brahmins, portrayed themselves as superior and treated other caste people as slaves. Many were considered as untouchables and unfit based on caste hierarchies. The Siddhars have raised a revolt against the Vedics, their principles and doctrines. Caste and religion are inextricably intertwined in Indian society. They are inextricably intertwined. The Siddhars are foremost in denouncing the caste system which is the main reason for the division in the society. Siddhars who saw the inequalities that existed between them in their time, stood bravely and opposed the caste system. Caste oppression is one of the most prevalent things in Indian society. One of its inputs is the untouchability and is created as a result of a dominant mindset that does not treat fellow human beings as equals. If you touch the untouchables you will be defiled. Seeing this cruelty, the Siddhars raised their voices against untouchability. The Siddhars have also sung against untouchability as a part of caste oppression. The Siddhars condemned the Vedas for citing grass-eating as the main reason for untouchability.

**Keywords:** Siddhar literature, Relationship, Virtue, Caste

## முன்னுரை

சித்தர் இலக்கியமானது தற்கால தமிழ் இலக்கிய உலகில் தனித்துவம் பெற்ற இலக்கியமாக இன்றளவும் திகழ்ந்து கொண்டு வருகின்றது. சித்தர்கள் தங்களுக்கென கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளை இலக்கணமாக வகுத்து அதன் வழி வாழ்ந்து காட்டியுள்ளனர். இவர்கள் மக்களிடத்தில் உள்ள அறியாமை எனும் இருளை அகற்றக்கூடிய ஆசிரியர்களாகவும், நோய்களைத் தீர்க்கக்கூடிய மருத்துவர்களாகவும், பொய்மைகளை வேரறுக்கும் புரட்சியாளர்களாகவும் இன்றைக்கும் வாழந்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

பல்வேறு காலக்கட்டங்களில் தோன்றியுள்ள சித்தர்கள் அனைவரும் சமூக சீர்திருத்த அறங்களையே குறிக்கோளாகக் கொண்டு பலப்பாடல்களைப் பாடியுள்ளனர். மேலும் முதன் முதலில் கற்றோர் மட்டுமே இலக்கியச் சுவையை நுகர முடியும் என்ற நிலையைத் தகர்த்து, படிக்காத பாமரரும் இலக்கிய இன்பத்தைப் பெறலாம் என உணர்த்துபவை சித்தர் பாடல்ளே ஆகும்.

இதனை "சித்தர் இலக்கிய வடிவம் இம் மண்ணுக்குச் சொந்தமானது. அதனால் பாமர மக்களிடையே எளிதில் பரவி வளர்ந்துள்ளது. சித்தர் இலக்கியங்கள் சமூகத்தில் அனைவரும் பின்பற்றும் வாழ்வியல் இலக்கியங்களாக விளங்குகின்றன" என்ற அவர்களின் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கதாகும் (Sargunaan, 2012).

## வருண பேதங்களை மறுத்தல்

"தமிழக வரலாற்றின் தொடக்கக் காலத்தில் ஆரியர்கள் தெற்குப் பகுதி நோக்கி வந்தனர். அதற்குப் பிறகே தமிழகத்தில் வருண வகைப்பாடு தோன்றியது என நம்பப்படுகிறது. ஆரியர்கள் இவ்வருணக் கொள்கையில் மிகுந்த பற்று கொண்டிருந்தனர். அவர்கள் இவ்வருணக் கொள்கையில் மிகுந்து பற்று கொண்டிருந்தனர். அவர்கள் மக்களை பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று நான்கு உயர்நிலையை ஏற்படுத்திக் கொண்டனர். வேதங்கள் புராணங்கள், ஸ்மிர்திகள் இவற்றிலிருந்து சான்று காட்டினர். பிராமணர் என்ற சொல் பிரமன் என்ற இயற்கை கடந்த ஆற்றலை உடையவன் என்ற பொருளில் பயிலப்பட்டது (Arivoli, 2012). என்கிற கருத்தை இவ்விடத்தில் பொருத்திக் காணுதல் அவசியமாகும். இவ்வாறு வேதங்களின் வழியும், புராணங்கள் வழியும் தங்களை உயர்ந்தோராய்க் காட்டிக் அடிமைகளாக நடத்தினர். சாதிய படிநிலைகளின் அடிப்படையில் பலரை தீண்டவும் தகாதவர்கள் எனவும் ஆக்கினர்.

இக்கொடுமைகளைக் கண்டு வெகுண்டெழுந்து சித்தர்கள் வைதீகர்களையும், அவர்களது வைதீகக் கொள்கைகளையும், அவர்களது வருண கோட்பாட்டையும் எதிர்த்து கலகக் குரல் எழுப்பியுள்ளனர்.

## சிலவாக்கியர்

வருண அடிப்படையில் மனிதர்களுள் ஏற்றத் தாழ்வு கற்பிக்கும் நிலையை கடுமையாகச் சாடும் சிவவாக்கியர் இப்பாடலில்,

"பறைச்சியாவ தேதடா பனத்தியாவதேதடா

இறைச்சிதோ லெலும்பினும் இலக்கமிட்டிருக்குதோ

பறைச்சிபோகம் வெறதோ பனத்திபோகம் வேறதோ

பறைச்சியும் பனத்தியும் பகுத்துபாபருமும்முளே"

என்று கடுமையாகச் சாடியுள்ளார் (Arivoli, 2012). சித்தர்களின் ஆன்மீகக் கோட்பாட்டின் அடிப்படையில் எல்லா உயிர்களுக்குள்ளும் உறைந்திருக்கும் இறைவன் ஒருவனே ஆவான். அந்த கோட்பாட்டின் அடிப்படையிலே பறைச்சியும் பனத்தியும் எவ்வித வேறுபாடும் இல்லாதவர்கள் ஆவர். சாதிய வேறுபாட்டின் எவ்விதமான அடையாளங்களும் அவர்களின் இறைச்சியிலோ, எலும்பிலோ குறிக்கப்படவில்லை என அறிவுப் பூர்வமாக வருணாசிரமக் கோட்பாட்டை எதிர்த்துள்ளார்.

## குதம்பைச் சித்தர்

மனித சமூகத்தைப் பிளவுபடுத்தும் சாதி என்கிற பேதமானது, மனித குலம் தோன்றிய போது, தொடக்கத்திலேயே தோன்றியதில்லை. அது இடையிலே புகுத்தப்பட்ட ஒன்றாகும் என்பதை குதம்பைச் சித்தர் தனது பாடலில்,

"ஆதி பரப்பிரமம் ஆக்கு மக்காலையில்

சாதிகள் இல்லையடி குதம்பாய்

சாதிகள் இல்லையடி"

என்றும், சாதிய ஏற்றத்தாழ்வை மறுக்கும் குதம்பைச் சித்தர் மேலும் ஒரு பாடலில் தனது சாதி மறுப்புக் கொள்கையினை முன் வைத்துள்ளார் (Arivoli, 2012).

“பற்பல சாதியாய்ப் பாரிற் பகுத்தது

கற்பனை ஆகுமடி குதம்பாய்

கற்பனை ஆகுமடி”

இப்பாடலின் வழி சாதி என்கிற கருத்துரு கற்பனையாக உருவாக்கப்பட்டது என்றுரைத்துள்ளார்.

## பாம்பாட்டிச் சித்தர்

சாதி எனும் தீயசக்தி மனித சமுதாயத்தை சீரழிப்பதைக் கண்டு பாம்பாட்டிச் சித்தர்,

“சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்

சந்தை வெளியினிலே கோலை நாட்டுவோம்

வீதிப் பிரிவினிலே விளையா டிடுவோம்

வேண்டாத மனையினி லுறவு செய்வோம்”

என வெகுண்டு கூறியுள்ளார். இப்பாடலில் பாம்பாட்டிச் சித்தரின் சாதி மறுப்புச் சிந்தனை அழுத்தமான முறையில் வெளிப்படுத்தியுள்ளதை காணமுடிகிறது (Arivoli, 2012).

## சிவவாக்கியர்

மாடுகள் என்னும் பொது உயிரனத்துள் எருமை சாதி காளையையும், பசுவையும் இணைத்தால் கரு உண்டாகாது. ஆனால் வேதம் ஓதும் உயர்ந்த சாதி என அழைக்கப்படும் ஆடவனையும், புலைச்சி என அழைக்கப்படும் கீழ்க் குலத்துப் பெண்ணையும் இணையும்படி செய்தால் கரு உண்டாகும். எனவே மனித குலத்திற்குளு் சாதி என்பது துளியும் இல்லை என்கிற கருத்தினைச் சிவவாக்கியர் பின்வருமாறு,

“மேதியோடும் ஆவுமே விரும்பியே புணர்ந்திடில்

சாதிபேத மாய்உருத் தரிக்குமாறு போலவே

வேதமோது வானுடன் புலைச்சி சென்று மேவிடில்

பேதமாய்ப் பிறக்கிலாத வாறதென்ன பேசுமே”

என்னும் பாடலின் மூலம் சிவவாக்கியர் சாதி என்ற ஒன்று மனிதகுலத்தில் இல்லை என்ற கருத்தினை ஆணிதரமாக உரைக்கச் சொல்லியள்ளார் (Arivoli, 2012).

## அகத்தியச் சித்தர்

கற்பனையாய் சாதியினைச் தோற்றுவித்ததன் நோக்கம், உலகில் சிலர் தங்களின் பிழைப்பிற்கே அன்று வேறொன்றிற்கில்லை என்பது அகத்தியரின் ஆணிதரமான கருத்தாக உள்ளது. சிலர் மனித சமுதாயத்தை சாதி அடிப்படையில் பிரித்துப் பிழைத்திட்ட செய்தியை,

“ஊனென்ற வுடலை நம்பி யிருந்த பேர்க்கே

ஒரு நாக்கு வேதமென்றும் நூலே மென்றும்

நானென்றும் நீயென்றும் சாதி யென்றும்

நாட்டினா குலகத்தோர் பிழைக்கத் தானே”

என்ற பாடலின் வாயிலாக ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் தாங்கள் பிழைக்கவு இவ்வாறான சாதிக் கோட்பாட்டை உருவாக்கி வளர்த்துள்ளனர் என்பதை அகத்தியச் சித்தர் எழுத்துரைத்துள்ளார் (Arivoli, 2012).

## தீண்டாமை மறுப்பு

இந்திய சமூகத்தில் நிலவி வரும் கொடுமைகளில் முக்கியமானது சாதிக் கொடுமையாகும். அதன் ஒரு உள்ளீடு தான் தீண்டாமை எனும் சமூகக் கொடுமையாகும். தன்னுடன் வாழும் சக மனிதர்களைச் சமமாகக் கருதமுடியாத, மேலாதிக்கச் சிந்தனையின் விளைவாக உருவாக்கப்பட்டதே தீண்டாமையாகும். அவ்வாறு தீண்டினால் தீட்டப்படும் என்கிற கருத்தோட்டமும் தீண்டாமையுள் அடங்குகிறது. இக்கொடுமையைக் கண்ட சித்தர்கள் தீண்டாமைக்கு எதிராக உரத்தக் குரலினை எழுப்பியுள்ளனர்.

## சிவவாக்கியர்

மேல் சாதியினர் என்று தங்களை கூறுபவர்கள், தீண்டாமையினைக் கடைப்பிடிப்பதற்கு, பிற மக்களின் சாதி மற்றும் அச்சாதி மக்கள் உண்ணும் இறைச்சி முறையும் ஒரு காரணமாகக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் இறைச்சியை உண்பவர்கள் தீண்டத் தகாதவர்கள் என்ற கருத்தை சிவவாக்கியர் ஏற்க மறுத்துள்ளார். ஆகவே தீண்டாமையைக் கடைப்பிடிக்கும் வேதியரை நோக்கி,

"புலால்புலால் புலாலதென்று பேதைமைகள் பேசறீர்

புலாலைவிட்டு எம்பிரான் பிரிந்திருந்தது எங்கனே?"

என்ற பாடலில் எல்லா இடத்திலும் இருக்கும் இறைவன், புலாலுள்ளும் இருக்கும் போது புலால் உண்பவர்களை, புலால் உண்பதைக் காரணம் காட்டி, தீண்டாமைக்கு உள்ளாக்குவது நகைப்புக்குரியது என்று கூறியுள்ளர் (Arivoli, 2012). மேலும்,

"உதிரமான பால்குடித்து ஒக்கநீர் வளர்ந்ததும்

இரதமாய் இருந்ததொன்று இரண்டுபட்ட தென்னலாம்

முதிரமாக விட்டதேது மாமிசப் புலாலதென்று

சதிரமாய் வளர்ந்ததேது சைவரான மூடதே"

இப்பாடலில் வேதியர்கள் மாட்டிறைச்சியை உண்பதில்லை. ஆனால்மாட்டின் இரத்தமாயை பாலை உண்டு வாழ்கின்றனர். இரசமாக இருக்கும் ஒன்றே விந்தாகவும், முட்டையாகவும் முறையே ஆணிடத்தும், பெண்ணிடத்தும் உள்ளது. அந்த இரசமே மாமிசமாக புலாலாக, உடம்பாக வளர்கின்றது. இதனை சைவ உணவைப் பற்றி பெரிதாகப் பேசுபவர்கள் முதலில் உணர வேண்டும் என்று சிவவாக்கியர் தீண்டாமையினைக் கொடுமையை கடுமையாக சாடியுள்ளார் (Arivoli, 2012).

## முடிவுரை

இவ்வாறாக சாதிக் கொடுமைகளை எதிர்த்து, மக்கள அனைவரும் சமம் என்று சமதர்மத்தை வலியுறுத்தியே சித்தர்கள் தங்களது பாடல்களின் வாயிலாக பல அறக்கருத்துக்களை வலியுறுத்தியுள்ளனர். தங்களது சுயலாபத்திற்காக சிலர் மக்களிடையே பல்வேறு விதங்களில் சாதி வேற்றுமைகளைப் புகுத்தி, சுயலாபத்தை அடைபவர்களைச் சித்தர்கள் கடுமையாகச் சாடியுள்ளனர். மேலும் சாதியின் உண்மைச் தன்மையறிந்து, மனிதன் மனிதனாக வாழவேண்டும் என்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் மூலம் சான்றுகளின் வாயிலாக விளக்கப்பட்டுள்ளது.

## References

Arivoli, A. (2012) Siddhar Padalkal Mollamum Uraiyum, Kazhaga Velliyeddu, Chennai, India.

Sargunaan, (2012) Sidhar Karuvulam, Kazhaga Veeliyeedu, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License